Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.389/2025

Dated 18-12-2025
Deposition of witness for : PW 13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுரளி | வயது | : | 38 |
| தந்தை பெயர் | : | ரெங்கநாதன் | தாலுக்கா | : | பட்டுக்கோட்டை |
| கிராமம் | : | பட்டுக்கோட்டை | தொழில் | : | உதவி பேராசிரியர். |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld. D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமணையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிகிறேன்.

2) கடந்த 7.7.2025 அன்று மேற்படி மருத்துவமணையில் பணியில் இருந்தபோது தஞ்சாவூ தெற்கு டவுன் காவல்நிலைய கு.எண்.146/2025 45 வயது மதிக்கதக்க திருவேங்கடம் என்ற

ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக அதே காவல் நிலையத்தை சேர்ந்த காவல் ஆய்வாளர் அவர்கள் கொடுத்து அனுப்பிய த.கா. சிவபாதசேகரன் எண்.2428 என்பவர் பகல் 2.50 மணிக்கு என்னிடம் கொடுத்தார். அவர் மேற்படி இறந்துபோன திருவேங்கடத்தின் உடலை பிணவறையில் வைத்து எனக்கு அடையாளம் காட்டினார். நான் அந்த பிரேதத்தை பார்த்தபோது பிரேத விரைப்பு தன்மை உடல் முழுவதுமாக காணப்பட்டது. அவரது உடல் மிதமான போசாக்குடன் காணப்பட்டது. அது ஆண் பிரேதம் ஆகும். அழுகியதற்கான மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை. வலது பக்க முகத்தில ரத்தம் உறைந்து காணப்பட்டது. வலது கண்புறம் சுற்றி கருப்பு நிற வளையம் காணப்பட்டது.

கீழ் கண்ட காயங்கள் அவரது உடலில் அவரது இறப்புக்கு முன்பு ஏற்பட்ட காயங்களாக இருந்தன.

1) a) சிவப்பு நிற சிராய்ப்பு காயம் சிவந்த நிலையில் காணப்பட்டது. வலது கண்ணுக்கு மேல் 3x2 செ.மீ. அளவில் இருந்தது.

b) வலது பக்க மூக்கில் 3x2 செ.மீ. அளவில் காயம் காணப்பட்டது.

c) இடது பக்க கன்னத்தில் 4x3 செ.மீ. அளவில் காயம் காணப்பட்டது.

d) ஒன்றுக்கு மேற்பட்ட பலவகையான அளவில் 2x1 முதல் 1x1 செ.மீ. அளவில் வலது பக்க கையின் பின்புறத்தில் காணப்பட்டது.

2) 6x5 சதை ஆழமுள்ள அடர்ந்த சிவப்பு நிறத்தில் கன்றிய காயம் வலது புறம் தோள்பட்டையின் மேல் காணப்பட்டது.

3) ஒரு பிளவுப்பட்ட ஒழுங்கற்ற கன்றிய காயத்துடன் கிழிந்த காயங்கள் காணப்பட்டது.

a) வலது கண்ணுக்கு கீழ் 3x1 x திசு ஆழம் உள்ள காயம் காணப்பட்டது.

b) 2x1 செ.மீ அளவில் வலது புறுவத்தின் கீழ் முந்தைய காயத்தின் 1 செ.மீ. கீழே காணப்பட்டது.

c) மூக்கின் அடியில் 4x2 செ.மீ. அளவில் எலும்பு ஆழம் வரை காயம் காணப்பட்டது.

d) வலது புறம் உதட்டிற்கு மேல் 6x2x எலும்பு ஆழம் வரை காயம் காணப்பட்டது. அதன் அடியில் வலது தாடை எலும்பு ஒழுங்கற்ற முறையில் எலும்பு முறிவு ஏற்பட்டு ரத்தம் உறைந்து காணப்பட்டது. வலது பக்க பற்கள் உடைந்தும் இடம்மாறியும் காணப்பட்டது.

e) வலது பக்க பின் மண்டையில் 6x4x எலும்பு ஆழம் வரை காயம் காணப்பட்டது.

f) இடது பக்கம் பின் மண்டையயில் 8x2x எலும்பு ஆழம் வரை காயம் காணப்பட்டது.

4) தலை தோல், மண்டை ஓடு, மூளை ஜவ்வு பிரித்து பார்க்கும்போது அடர்ந்த சிவப்பு நிறத்தில் தலை தோல் ஆழம் உடைய கன்றிய காயங்கள் 10x8, 6x4, 4x2 அளவில் முறையே இடது பக்க மண்டை, வலது நெற்றி பொட்டில், வலது நெற்றி ஆகிய இடங்களில் காயங்கள் காணப்பட்டது.

5) மண்டை ஓட்டில் 7x5 அளவிலான அமுங்கிய எலும்பு முறிவு இடது பக்க பின் மண்டையில் காணப்பட்டது. அது பின் பக்க அடிமண்டை வரை நீண்டு ரத்தம் உறைந்து காணப்பட்டது.

6) 11 செ.மீ. அளவிலான கோடு போன்ற எலும்பு முறிவு வலது பக்க பின்மண்டையில் அடிபகுதியில் ரத்தம் உறைந்து காணப்பட்டது.

7)அடர்ந்த சிவப்பு நிற ரத்தங்கள் மூளையை சுற்றி காணப்பட்டது. மூளை இயல்பாக இருந்தது. வெட்டு தோற்றத்தில் அடர்ந்த சிவப்பு நிற கன்றிய காயங்கள் மூளையின்

பின்புறத்திலும் மூளையின் தண்டு வடத்திலும் காணப்பட்டது-

8) வலது புற நெஞ்சு எலும்பு 2 ல் இருந்து 6 நெஞ்சியின் உள் பகுதியில் நடுபகுதியில் கன்றிய காயம் காணப்பட்டது.

9) இருதயம்  சீராக இருந்தது. வெள்ளை நிற திட்டுக்கள் இதயத்திற்கு முன்னே பின்னே காணப்பட்டது.  இருதயத்தின் அறை உள்ளே ரத்தம் திரவமாகவும் கட்டியாகவும் காணப்பட்டது. ரத்த நாளங்கள் சீராக இருந்தது. நாவடி எலும்பு சீராக இருந்தது. நுரையீரல் சீராக இருந்தது. வெட்டு தோற்றத்தில் குறைந்த அளவு ரத்தம் கசிந்தது.  இரைபை சீராக இருந்தது. அதன் உள்ளே 140 கிராம் அளவுள்ள பச்சை நிறத்தில் பாதி செரித்த உணவு இருந்தது. பழசாறு வாடை தென்பட்டது. சில்லிடை படலம் அறிக்கப்பட்டு காணப்பட்டது. கல்லீரல் வெளிதோற்றத்தில் சீராக இருந்தது. வெட்டு தோற்றத்தில் மஞ்சள் நிற படிவம் உள்ளே காணப்பட்டது.மண்ணீரல், சிறுநீரகங்கள் வெளிறி காணப்பட்டது. சிறுநீரக பையில் 20 எம்.எல். நீர் இருந்தது. இடுப்பு எலும்பும், முதுகு எலும்பும் சீராக இருந்தது.

10) உடல் உள் உறுப்புகளை ரசாயன பகுப்பாய்வுக்காக தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை பெறப்பட்டது.  உறுப்புகள் நோயின் தன்மை  அறிய நோய் குறியீயல் துறைக்கு அனுப்பி அறிக்கை பெறப்பட்டது.  அந்த அறிக்கையில் இருதய ரத்த குழாயில் கொழுப்பு படிவம் காணப்பட்டதாகவும் மற்றொரு இருதய அறை சீராக இருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் வயிற்றி பகுதியில் 388 மில்லி கிராம் அளவில் எத்தில் ஆல்காகால் இருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது. சிறுகுடலில் 121

மில்லி கிராம் அளவில் எத்தில் ஆல்காகால் இருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது. கல்லீரல், சிறுநீரகத்தில் 233 மில்லி கிராம் அளவில் எத்தில் ஆல்காகால் இருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது. ரத்தத்தில் 28 மி.கி. % W/V எத்தில் ஆல்கஹால் கண்டறியப்பட்டுள்ளது. நஞ்சு கண்டறியப்படவில்லை. ரத்தம் உறைந்த துணியை ரத்த வகை மாதிரிக்காக தடவியல் துறைக்கு அனுப்பி அறிக்கை பெறப்பட்டது.

11) பிரேத பரிசோதனை பகல் 3 மணியளவில் ஆரம்பித்து 4 மணிக்கு முடிக்கப்பட்டது.

12) இறந்தவர் நான் உடற்கூராய்வு பரிசோதனை செய்த நேரத்தில் இருந்து சுமார் 12 மணி நேரத்தில் இருந்து 24 மணி நேரத்திற்குள்ளாக இறந்து இருக்க கூடும் என்றும் அவர் இறப்பு அவர் தலையில் ஏற்பட்ட காயத்தினால் ஏற்பட்ட ரத்தபோக்கினாலும் அதிர்ச்சியினாலும் இறந்திருக்க கூடும் என்று கருத்து தெரிவித்தேன்.

13) காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.11 ஆகும். இறுதி கருத்துரையுடன் கூடிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.12 ஆகும். உயிரியியல் ஆய்வறிக்கை அ.சா.ஆ.13 ஆகும். குருதி நீரியியல் ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.14 ஆகும். உடல் உள் உறுப்புகள் ஆய்வறிக்கை அ.சா.ஆ.15 ஆகும்.

14) என்னிடம் காட்டப்படும் மர ரீப்பரால் ஒரு நபரை தாக்கினால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்டு இறப்பு நேர வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது.

15)இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) மேற்படி காயங்கள் இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்களா அல்லது இறப்பிற்கு பின்பு ஏற்பட்ட காயங்களா என்பதை HISTOPATHALOGY மற்றும் HISTO CHEMISTRY ஆய்வுஅறிக்கை பெற்றால்தான் கண்டறியமுடியும் என்றால் தவறு.

2) காயங்களின் விளிம்பு ஓரங்களில்உள்ள திசுக்களை சேகரித்து HISTOPATHALOGY ஆய்வு செய்தால்தான் மேற்படி காயங்கள் இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்களா அல்லது இறப்பிற்கு பின்பு ஏற்பட்ட காயங்களா என்பதை கண்டறிய முடியும் என்றால் தவறு.

3) நான் சொன்ன மேற்படி காயங்கள் முழுவதும் மரணத்திற்கு பிறகு ஏற்பட்ட காயங்கள் என்றும் அந்த காயங்களின் வயதை கண்டறிவதற்கு உரிய HISTOPATHALOGY ஆய்வு செய்யாமலேயே அவைகள் இறப்புக்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
தஞ்சாவூர்